தேதி.04.11.2025

<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

O.S. No. 212/2018 திரு.முருகேஷ் பாண்டியன், த/பெ.காளசாமி வா.சா.1

<u>வா.சா.1: சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>

இந்தியன் பேங்க் அசோசியேசனில் கல்விக்கடன் வழங்குவது பற்றி விதிமுறைகள் சொல்லப்பட்டுள்ளது அது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி விதிமுறைகளை என்னுடைய வழக்கறிஞர் தான் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் எனக்கு காட்டப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது வங்கியில் கொடுத்த கல்விக்கடன் வழங்கிய விதிமுறைகள் தவறானது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது வங்கியின் எந்த சுற்றறிக்கையின் அடிப்படையில் கல்விக்கடன் வழங்கப்படுகிறது என்றால் வங்கி கடனுக்கான விதிமுறைகள் படி வழங்கப்படுகிறது. மேற்படி விதிமுறைகளை நீதிமன்றத்தில் ஆஜர் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி விதிமுறைகளை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யாமல் இவ்வழக்கை நடத்த முகாந்திரம் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி கல்விக்கடன் விதிமுறைகள் படி கல்வி கற்கும் நான்கு ஆண்டுகள் மற்றும் ஓர் ஆண்டு கால அவகாசம் உள்பட மொத்தமாக ஐந்து ஆண்டுகள் கழித்து தான் கடனை கட்டவேண்டும் என்றால் வேலைக்கு சேர்ந்திருந்தால் உடனே கல்விக்கடனை கட்ட வேண்டும். இல்லையென்றால் ஆறு மாதம் அல்லது ஒரு வருடம் கழித்து கடன் கட்ட ஆரம்பிக்க வேண்டும். மேற்படி கடன் வாங்கிய தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் கழித்து தான்

கடனை திருப்பி கேட்க அதிகாரம் உள்ளது என்றால் சரியல்ல. கடன் எப்போது வாங்குகிறார்களே அதிலிருந்து படிப்பை எப்போது முடிக்கிறார்களோ அதிலிருந்து ஆறு மாதமோ அல்லது ஒரு வருடம் கழித்து தான் கடனை திருப்பி கேட்க அதிகாரம் உள்ளது. கடன் வாங்கிய தேதியிலிருந்து ஐந்து கழித்து தான் கடனை திருப்பி கேட்க அதிகாரம் உள்ளது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி 21.12.2012ம் தேதியில் கடன் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி கடன் வாங்கிய தேதியான 21.12.2012லிருந்து 21.12.2017ல் தான் ஐந்து ஆண்டுகள் முடிகிறது என்றால் சரியல்ல. திருப்ப செலுத்துவதற்கான தேதி அதுவல்ல. எங்களுடைய விதிமுறைகளின் படி கல்விக்கடன் வாங்கிய தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் என்று கணக்கிட வேண்டும் என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் 21.05.2017ம் தேதியில் கடனை திருப்பி செலுத்தவேண்டும் என்று பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு செல்லாது என்றால் சரியல்ல. எங்களது வங்கி விதிமுறைப்படி கல்விக்கடனுக்கு எவ்வளவு வட்டி என்றால் கடன் உத்திரவு செய்யும்போது 14.5% ஆகும். எங்கள் வங்கியின் விதிமுறைகள் படி 11.55% தான் வட்டி வாங்கவேண்டும் என்றால் சரியல்ல. மேற்படி 11.55% வட்டியானது ஐந்து ஆண்டுகள் கழித்தபின்னர் தான் ஆரம்பம் ஆகும் என்றும், அவ்வாறு ஆரம்பிக்கும் காலம் 1 சதவீதம் குறைந்து 10.55% தான் கேட்கவேண்டும் என்றால் சரியல்ல. எங்களுடைய வங்கியின் விதிமுறைகளை முறைப்படி பின்பற்றாமல் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளது ஏற்புடையது அல்ல என்றும், இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.